அசல் வழக்கு எண்: 57 /2021
நாள்: 04.12.2024
PW2
பெயர் : முத்துக்கருப்பன்
த/பெ : கோவிந்தன்
வயது : 57
ஊர் : மாராயப்பட்டி

2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04 ம் நாள் Indian Oaths Act–1969 பிரிவு –6(2)ன் ஏற்பாட்டின்படி வாதி தரப்பு சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

(சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>4,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வாதி எந்த புல எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண். 144/127 ஆகும் ,அதன் விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி வழகககு தாக்கல் செய்துள்ள இடத்தில் அனுமன் கோவில் கட்டப்பட்டுள்ளதா என்றால் அதன் மேற்கில் கட்டப்பட்டுள்ளது, மேற்கில் எவ்வளவு துாரத்தில் கட்டியுள்ளார்கள் என்றால் மேற்கில் கொஞ்ச துாரத்தில் 100 அடிக்குள் கட்டப்பட்டுள்ளது, தாவா இடத்தில் கோவில் கட்டப்பட்வில்லை. மாராயப்பட்டி கிராமத்தில் புல எண். 147/127 என்ற புலஎண் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது, கிராம நிர்வாக அலுவலருக்கு தான் தெரியும்.

2. தாவா இடத்தில் இருந்து 4 ம் பிரதிவாதியின் இடம் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் அனுமன் கோவிலுக்கு தென்புறம் 100 அடிக்குள் உள்ளது. இடையில் ரோடு உள்ளதா என்றால் தற்சமயம் சிமெண்ட் ரோடு உள்ளது. வழக்கு தாக்கல் செய்துள்ள வாதியின் பெயர் மாரியப்பன் என்கிற மாரிக்கண்ணு ஆகும். மாரியப்பன் என்கிற மாரிக்கண்ணு என சொல்லப்படுவதற்கு ஆதாரம் நான் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இருக்கிறது நான் பார்த்துள்ளேன், என்ன ஆதாரம் பார்த்துள்ளேன் என்றால் ரேசன் கார்டு, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவைகளை பார்த்துள்ளேன்.

3. நான் இந்த வழக்கிற்காக இந்த ஆவணங்கள் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மாரியப்பன் என்ற மாரிக்கண்ணு

என்பதற்கும் அரசாங்கத்தில் எந்த ஆவணங்களும் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு நடக்கும் தாவா சொத்தில் இருந்து வாதியின் உடைய வீடு எவ்வளவு துாரத்தில்இருக்கும் என்றால் சாட்சி முதலில் 300 மீட்டர் என கூறிவிட்டு , பிறகு குறைவாக இருப்பதாகவும், ஒரு மின்கம்பத்தில் இருந்து மற்றொரு மின்கம்பத்திற்கு இடையே இருக்கும் துாரம் என குறிப்பிடுகிறார். 4,5 பிரதிவாதிகள் என்ன செய்தார்கள் என்றால் வாதியின் வீட்டை இடித்தார்கள் , அதில் என்ன வீடு இருந்தது எனறால் கூரை வீடு இருந்தது .4,5 பிரதிவாதிகள் அவ்வாறு எந்த வீட்டையும் இடிக்கவில்லை என்றாலும், வாதி கேட்டுக் கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, ஆதாரம் இருக்கிறது. என்ன ஆதாரம் உள்ளது என்றால் அவர்கள் JCP ஆல் இடித்ததை புகைப்படம் எடுத்து வைத்துள்ளேன்.

4. அந்த இடத்தில் வெறும் மண்மேடு மட்டும் தான் இருந்தது என்றாலும், அந்த இடத்தை ஊர் பொது மக்கள் JCP வைத்து சுத்தம்செய்து கோவில் கட்டினார்கள் என்றாலும் சரியல்ல. அவ்வாறு கோவில் கட்டியதாக வாதியே ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்த பிறகு அதனை மறுத்துரைத்து சாட்சிய்ம அளிக்களனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதி எனது அக்கா கணவரா என்றால் இல்லை, எனது தாய்மாமா ஆவார். அவரது மகனை எனது மகளுக்கு திருமணம் செய்து கொடுத்தோம். அந்த உறவின் அடிப்படையில் தான் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், ஊரில் அனைவரும் சேர்ந்தது தாவா சொத்தில் கோவில் கட்டியுள்ளார்கள் என்றாலும் சரியல்ல.